மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

நாலடியாரில் வேற்றுமைத்தொகை இலக்கணம்

Naaladiyaaril Vettrumaithogai Ilakkanam

தரிசினி காளிதாசன்/ Tharisiniy Kalidasan[1]
[1]B. Ed, Sultan Idris Education University
Corresponding Email: tharisiniykalidasan@gmail.com

ஆய்வுச் சுருக்கம்

நாலடியார் ஒரு நீதி நூலாகக் கருதப்படுகிறது. பல வாழ்வியல் கருத்துக்களை பல்வேறு கோணங்களில் எடுத்துரைப்பது இந்நூலின் பயனாகும். இந்த ஆய்வின் நோக்கமானது நாலடியார் பாடல்களில் வேற்றுமைத்தொகை இலக்கணத்தைப் கண்டறிவது, நாலடியார் பாடல்களில் வேற்றுமைத்தொகை இலக்கணத்தைப் பகுத்தாய்தல் ஆகும். இந்த ஆய்வுக் கட்டுரையின் முதல் நோக்கம் விளக்குவியல் முறையிலும், இரண்டாம் நோக்கம் பகுப்பாய்வு முறையிலும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக் கண்டுபிடிப்பானது நாலடியாரில் உள்ள பாடல்களில் இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரை மறைந்திருக்கிறது. அவற்றில், ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபே நாலடியாரில் உள்ள பாடல்களில் அதிகமான அளவில் காணப்படுகிறது என்பதே இந்த ஆய்வின் வழி கண்டறியப்பட்டுள்ளது.
கருச்சொற்கள்: நாலடியார், வேற்றுமைத்தொகை, நீதி நூல்

Abstract

Naladiyar is considered to be a book of justice. The usefulness of this book is to present many life concepts from different angles. The purpose of this study is to find out the vetrumaiththogai grammar in naladiyar songs and to analyze the vetrumaiththogai grammar in naladiyar songs. The first purpose of this paper has been examined in an explanatory method and the second purpose is analytical. The findings of the study are hidden in the songs in naladiyar from the second vetrumai to the seventh vetrumai. The study found that the second vetrumai of 'I' is found to be the most prevalent in the songs of Naladiyar.
Keywords: naladiyar, vettrumaiththogai, niithi nool

முன்னுரை

நாலடியார் என்பது ஒரு சிறந்த நூல் மட்டுமின்றி அது ஒரு நீதி நூலாகவும் திகழ்கிறது. “ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி”. இப்பழமொழி, நாலடியாரின் பெருமையும் திருக்குறளின் சிறப்பையும் உணர்த்துகிறது. நாலடியார் என்ற நூல் சமண முனிவர்களால் பாடப் பெற்றதாகும். மேலும், நாலடியாரில் உள்ள வெண்பாக்கள் சமண சமயத்தவரால் செய்யப்பட்டவையாகும். நாலடியார் 40 அதிகாரங்களில் 400 பாடல்களுடன் அமைந்திருக்கிறது (இராமசுப்பிரமணியம், 2011). இதில் அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் ஆகும். அதோடு, பதுமனார் என்ற புலவர் நாலடியாரை இயல் அதிகாரங்களாகவும் வகுத்துள்ளார். அவை துறவற இயல், இல்லறவியல், அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகை இயல், பன்னெறியியல், இன்ப துன்ப இயல் மற்றும் இன்பவியல் ஆகும். அதுமட்டுமின்றி, திருக்குறளில் ஒரு அதிகாரத்தில் பத்துப் பாடல்கள் இருப்பது போலவே நாலடியாரிலும் ஒரு அதிகாரத்தில் பத்துப் பாடல்கள் இருக்கின்றன.

தமிழில் இருவகைத் தொடர்கள் இருக்கின்றன அவை தொகைநிலைத் தொடர் தொகாநிலைத் தொடர் ஆகும். இந்த இருவகைத் தொடர்களையும் வேறுபடுத்திக் காட்டுவதற்குத் தொகுத்தல் என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. தொகுத்தல் என்ற சொல்லுக்கு மறுபொருள் மறைத்தல் என்பதாகும். இலக்கணத்தில் தொகுக்கப்பட்ட தொடரைத் தொகை என்று குறிப்பிடப்படுகிறது. எனவே, எதுவும் மறையாத நிலையிலுள்ள தொடர் தொகாநிலைத் தொடர் என்றும் யாதேனும் மறைந்திருக்கும் நிலையிலுள்ள தொடர் தொகைநிலைத் தொடர் எனப்படுகிறது (பொன்மணி மாறன், 2008). தமிழில் தொகைகள் ஆறு வகைப்படும் அதில் ஒன்றுதான் வேற்றுமைத்தொகை. வேற்றுமைத்தொகை என்பது வேற்றுமை உருபு மறைந்துவரும் தொகை என்பதாகும். சொற்புணர்ச்சி இலக்கணத்தில் தொகாநிலைத் தொடர் மற்றும் தொகைநிலைத் தொடர் பெரும் பங்காற்றுகிறது என்றால் அது இன்றியமையாது.

ஆய்வு வரையறை

நாலடியாரில் உள்ள 400 பாடல்களில் 19 பாடல்களில் வேற்றுமைத்தொகை கண்டறியப்பட்டுள்ளன. கண்டறியப்பட்டவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை அறத்துப்பால், பொருட்பால் மற்றும் காமத்துப்பால் ஆகும். அறத்துப்பாலில் 7 பாடல்களும் பொருட்பாலில் 8 பாடல்களும் காமத்துப்பாலில் 2 பாடல்களும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

நாலடியாரில் காணப்படும் வேற்றுமைத்தொகை

(அறத்துப்பால்)

1) *அறுசுவை உண்டி* அமர்ந்து இல்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் – வறிஞராய்ச்

பொருள்: அருமையாக விளங்கும் ஆறு சுவை கொண்ட உணவை அன்பின் மிக்க மனைவியானவள் பரிந்து ஊட்ட இனிது மகிழ்ந்து உட்கொண்டவரானாலும் அவ்வுணவின் சிறப்பினை இழந்து வருமையுடையவராகி எளிமை விளங்கும் கூழ் உணவாக இருப்பினும் அதனை நாடி உண்பதற்கு அமைவர். ஆதலால், எத்தகைய செல்வதையும் நிலையானது என்று மனத்தில் கொள்ளப்படுவது அன்று.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	மறுசிகை நீக்கி → **மருசிகையை** நிக்கி **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (மருசிகையை நிக்கி என்றால் உணவுக் கவளத்தை நிக்கி என்பதாகும்.)
இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	அறுசுவை உண்டி → ஆறு **சுவையைக் கொண்ட** உணவு **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபும் **கொண்ட** என்ற வினையும் மறைந்திருக்கிறது

2) **யானை எருத்தம்** பொலியக்குடை நிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும் – எனை

பொருள்: யானையின் கழுத்தின் மீது வெண்கொற்றக் குடை நிழலின் கீழ்ச் சேனைத் தலைவராக மிடுக்கோடு உலா வந்தவர்களும் தீவினையால் பீடிக்கப்பட்டு வருத்தத் தமது செல்வ நிலையானது மாறுபட்டுத் திரிந்து அழிவர். அதுமட்டுமல்லாது தாம் அரிதின் பெருமையோடு மணம் கொண்ட மனைவியையும் பகைவர் கவர்ந்து செல்வர்.

வேற்றுமைத்தொகை :

ஐந்தாம் வேற்றுமைத்தொகை	யானை எருத்தம் → **யானையின்** எருத்தம்

	இன் என்ற <u>ஐந்தாம் வேற்றுமை</u> உருபு மட்டும் மறைந்திருக்கிறது (யானையின் எருத்தம் என்றால் யானையின் கழுத்து என்பதாகும்)

3) உடாஅதும் உண்ணாதும் தம்**உடம்பு செற்றும்**
கெடாஅத நல்லறமும் செய்யார் – கொடாஅது

பொருள் : வானளாவும் உயர்ந்து ஓங்கும் மலைகளையுடைய வேந்தனே! தமக்குப் பொருந்தியவாறு நல்ல உடைகளை உடுக்காமலும், இனிய சுவைமிக்க உணவை உட்கொள்ளாமலும் தமது உடம்பை வருத்தியவராகி, எக்காலத்திலும் கெடுதலை உண்டாக்காத நல்லறங்களைச் செய்யாதும், வறியவர்களுக்குக் கொடுத்து உதவமாலும், பொருளை வைத்துப் பாதுகாப்பவர் அப்பொருளைப் பயனுறச் செய்யாது இழப்பவராவர். இது பல மலர்களிலிருந்து ஈட்டிய தேனை இழக்கும் தேனீக்களுக்குச் சான்று கூறுதலுக்கு ஒக்கும். தேனீக்கள் தாம் சேகரித்த தேனை நுகராது அத்தேன் கூடு பிறரால் அழிக்கப்படுதல் போன்று பெருஞ்செல்வம் பயனின்றிக் கள்வர் முதலியோரால் கைக்கொள்ளப் படுதலால் இழப்பு உண்டாகும் என்பதாம்.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	உடம்பு செற்றும் ⟶ **உடம்பை** செற்றும் **ஐ** என்ற <u>இரண்டாம் வேற்றுமை</u> உருபு மறைந்திருக்கிறது (உடம்பை செற்றும் என்றால் உடம்பை வருத்தி என்பதாகும்)

4) பல்கழன்று பண்டம் பழிகாறும் – இல்செறிந்து
காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே

பொருள் : பேசும் சொல்லில் வலிமையிழந்து குலைந்தும், நடைதளர்ந்து கோல் ஊன்றிச் சோர்ந்தும், பற்கள் உதிர்ந்தும் இவ்வுடபானது பிறரால் பலித்துக் கூறும் அளவும் நல்லறம் புரியாத மனை வாழ்கையில் காமத்தால் உழன்று நல்லறிவு காணாதவர்கள் மெய்யான இன்பத்தை நுகரும்வகை உண்டாவதில்லை. ஈண்டு இளமை பருவத்தில் பிறர்க்கு அறம் செய்து புண்ணியத்தை ஈட்டாதவர்கள் மெய்யான இன்பத்தை நுகரதவர்கள் ஆவர். மேலும், பிறரால் மூப்பின் தன்மையில் இழிவு கண்டும் பழிக்கபடுவார்கள் என்பதாம்.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	காம நெறிபடரும் → **காமத்தை** நெறிபடரும் **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது (காமத்தை நெறிபடரும் என்றால் போகத்தை விரும்புவது என்பதாகும்)

5) வெறிஅயர் வெங்களுத்து **வேல்மகன் பாணி**
குறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க

பொருள் : வெறியாட்டம் செய்யும் ஒருவன் கையில் வேல் ஏந்தி ஆட அவன் கையில் கட்டியுள்ள பசுந்தளிர்களை ஆங்குப் பலி இடுதற்காக் கொண்டு செல்லப்படும் ஆடு அத்தழைகளைத் தின்று சுவைத்து மகிழும். தான் சில நொடிப் பொழுதில் பலியாகப் போவதை அறியாத ஆடு சிறப்பில்லாத மகிழ்ச்சியில் சிறிது நேரம் மகிழ்வில் ஆதல் போல நிலையில்லாத இளமைப் பருவத்தை மகிழ்வுடையதாக எண்ணுதல் அறிவுடையவர்களிடத்து இல்லை.

வேற்றுமைத்தொகை :

ஆறாம் வேற்றுமைத்தொகை	வேல்மகன் பாணி → **வேல்மகனது** பாணி **அது** என்ற ஆறாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (வேல்மகனது பாணி என்றால் வெறியாட்டம் செய்பவனது கை என்பதாகும்)

6) **கரும் பாட்டிக்** கட்டிச் சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேம்கால் துயராண்டு உழவார்

பொருள் : கரும்பை ஆலையில் இட்டுச் சாறு எடுத்த பின்பு அதன் சக்கையை எரிந்து வெல்லத்தை உண்டாக்குவார்கள். அப்போது இச்சக்கை இனிய சாற்றைத் தந்த பொருள் என்று எண்ணமாட்டார்கள். அது போலவே வாழ்நாளில் அறம் செய்த மேலோர்கள் முதுமையடைந்து வற்றிய உடலாகி இறப்பு வருவதை எண்ணி வருந்த மாட்டார்கள்.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	கரும்பு ஆட்டிக் → **கரும்பை** ஆட்டிக் **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (கரும்பை ஆட்டி என்றால் கரும்பை ஆலை இட்டுச் என்பதாகும்)
மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	துரும்பெழுந்து வேம்கால் → **துரும்பெழுந்தினால் ஏற்படும்** வேம்கால் **ஆல்** என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் **ஏற்படும்** என்ற வினையும் மறைந்திருக்கிறது. (துரும்பெழுந்தினால் ஏற்படும் வேம்கால் என்றால் கரும்பு சக்கையால் ஏற்படும் வெல்லத்தை என்பதாகும்)

(பொருட்பால்)

7) **கல்வி கரையில** கற்பவர் நாள்சில
மெல்ல நினைக்கின் பிணிபல – தெள்ளதின்

பொருள் : கல்விக்கு எல்லை இல்லை. ஆயினும் கற்பவர்கள் வாழ் நாள் சிலவேயாம். மெல்லக் கற்க வேண்டும் என்றால் பிணிகள் வந்து தடை செய்யும். தெளிவாக ஆராய்ந்து அன்னப்பறவை நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுவது போன்று தரமான கல்வியைக் கற்க.

வேற்றுமைத்தொகை :

நான்காம் வேற்றுமைத்தொகை	கல்வி கரையில → **கல்விக்கு** கரையில **கு** என்ற நான்காம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது (கல்விக்கு கரையில என்றால் கல்விக்கு எல்லை இல்லை என்பதாகும்)

8) **இருக்கை எழலும்** எதிர்செலவும் எனை
விடுப்ப ஒழிதலோடு இன்ன – குடிப்பிறந்தார்

பொருள் : பெரியோரைக் கண்டால் தம் இருப்பிடத்திலிருந்து எழுந்து எதிர் சென்று வரவேற்றலும், பிரிந்து செல்லும் போது சிறிது பின் சென்று திரும்புதலும் உயர் குலத்துப் பிறந்தவர்கள், குன்றாத ஒழுக்கமாகக் கொள்வார்கள். கீழ் மக்கள் அத்தன்மையை உணர்தலும் அறியது.

வேற்றுமைத்தொகை :

ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	இருக்கை எழலும் → **இருக்கையிலிருந்து** எழலும் **இருந்து** என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது (இருக்கையிலிருந்து எழலும் என்றால் இருப்பிடத்திலிருந்து எழுந்து என்பதாகும்)

9) விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும்

பொருள் : படம் விரிதலையுடைய நாகம் நிலத்தின் வெடிப்பின் உள்ளே இருந்தாலும் வானத்தில் தோன்றும் இடியின் ஒளிச்சீற்றமானது தொலைவிலிருந்து அச்சத்தை உண்டாக்கும். அது போல பெருமையுடைய மேலோர்கள் வெகுண்டால் அவர்களுக்குத் தீங்கு இழைத்தவர்கள் அருமையுடைய பாதுகாவலைக் கொண்டிருந்தாலும் தப்பிக்க முடியாது.

வேற்றுமைத்தொகை :

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	உருமின் கடுஞ்சினம் → **உருமினால் ஏற்படும்** கடுஞ்சினம் ஆல் என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் **ஏற்படும்** என்ற வினையும் மறைந்திருக்கிறது. (உருபினால் ஏற்படும் கடுஞ்சினம் என்றால் இடியால் ஏற்படும் கடுஞ்சினம் என்பதாகும்) –

10) **மன்னர் திருவும்** மகளிர் எழில் நலமும்
துன்னியார் துய்ப்பர் தைகள் வேண்டா – துன்னிக்

பொருள் : அரசர்களால் பெறப்படும் செல்வப் பேறும், மகளிர் தம் எழில் நலமும் நுகர்வதற்கு நெருக்கத்தைத் தவிரத் தனித்ததொரு தகுதியும் வேண்டாது. இதுநெருங்கிய தளிர்களையுடைய மரத்தின் குளிர்ந்த நிழலில் எல்லோரும் நெருங்கி நிழல் பெறுதலை ஒக்கும்.

வேற்றுமைத்தொகை :

மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	மன்னர் திருவும் → **மன்னரால் பெறப்படும்** திருவும் **ஆல்** என்ற மூன்றாம் வேற்றுமை உருபும் **பெறப்படும்** என்ற வினையும் மறைந்திருக்கிறது. (மன்னரால் பெறப்படும் திருவும் என்றால் மன்னரால் பெறப்படும் செல்வம் என்பதாகும்)

11) **கோட்டுப்பூப்** போல மலர்ந்தபின் கூம்பாது
வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி – தோட்ட
காயப்பூப் போல் முன்மலர்ந்து பின்கூம்பு வாரை

பொருள் : மலையில் மலரும் பூ முதற்கண் பூத்து, மலர்ந்து பின் கூம்பாது இருத்தல் போன்று நுதற்கண் விரும்பிச் சேர்ந்து இறுதிக் காலம் வரை அன்புடன் மேவுதலே நட்பின் தலையாயது. நீர் நிலைகளில் பூக்கும் பூ முதற்கண் மலர்ந்து பின் கூம்பி வதங்கி விடும் அதுபோன்ற தன்மையுடையவர்கள், நட்பை விரும்புபவர்கள் இல்லை.

வேற்றுமைத்தொகை :

ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	கோட்டுப் பூ → **கோட்டுலிருந்து மலர்ந்த** பூ **இருந்து** என்ற ஐந்தாம் வேற்றுமை உருபும் **மலர்ந்த** என்ற வினையும் மறைந்திருக்கிறது. (கோட்டுலிருந்து மலர்ந்த பூ என்றால் மலையிலிருந்து மலர்ந்த பூ என்பதாகும்)
ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை	காயப் பூ → **காயப்பில் பூக்கும்** பூ **இல்** என்ற ஐந்தாம் வேற்றுமை உருபும் **பூக்கும்** என்ற வினையும் மறைந்திருக்கிறது. (காயப்பில் பூக்கும் பூ என்றால் நீர்நிலையில் பூக்கும் பூ என்பதாகும்)

12) **கரும வரிசையால்** கல்லாதார் பின்னும்
பெருமை யுடையாரும் சேறல் – அருமரபின்

பொருள் : அருமை மேவும் தொல் மரபின்படிக் குளிர்ந்த அலை ஒலிக்க விளங்கும் நாட்டின் தலைவனே! பணியின் தன்மை காரணமாகக் கல்லாதவர்களோடு கல்வியில் மேம்பட்ட பெருமையுடையவர் சேர்தல் பேதைமையன்று. அஃது அறிவின் மிக்கது.

வேற்றுமைத்தொகை :

ஐந்தாம் வேற்றுமைத்தொகை	கரும வரிசையால் → **கருமின்** வரிசையால் **இன்** என்ற ஐந்தாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது (கருமின் வரிசையால் என்றால் பணியின் முறைமை என்பதாகும்)

13) **கடமா தொலைச்சியா** கானுறை வேங்கை
இடம் விழ்ந்தது உண்ணாது இறக்கும் – இடமுடைய

பொருள் : மதம் கொண்ட யானையை வீழ்த்திய புலி தனக்கு இடப்பக்கமாக விழக்கண்டால் பசித்த நிலையிலும் உண்ணாது உயிர்துறக்கும் அது போலவே சான்றோர் மானம் கெடுமாறு வருவதாயினும். சுவர்க்கப் பெருவாழ்க்கையையும் விரும்ப மாட்டார்கள்.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	கடமா தொலைச்சியா → **கடமாதை** தொலைச்சியா **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (கடமாதைத் தொலைச்சியா என்றால் மதம் கொண்ட யானையை வீழ்த்திய என்பதாகும்)

14) மெய்ஞ்ஞானம் கோட்டி உறழ்வழிவிட்டு ஆங்கோர்
அஞ்ஞானம் தந்திட்டு அது ஆங்கு அறத் துழாய்க்

பொருள் : மெய்ம்மை அறிவுடைய சான்றோர் கூட்டத்திற் கலந்து அவர்வழி நடந்து ஒழுதலை விடுத்துப் பயனற்ற சொற்களைக் கூறி அவற்றையே மிகவும் பாராட்டும் சிற்றறிவு உடையவர் இடையே புகழ்மிக்க நற்கருத்துகளைச் சான்றோர் பெருமக்கள் கூறாது வாய்திறவாது இருத்தலே ஏற்றது.

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	அஞ்ஞானம் தந்திட்டு → **அஞ்ஞானத்தை** தந்திட்டு **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (அஞ்ஞானத்தை தந்திட்டு என்றால் புன்மைக் கருத்துகளை உரைத்தல் என்பதாகும்)

(காமத்துப்பால்)

15) **செல்சுடர் நோக்கிச்** சிதாஅர் அரிக்கண் கொண்ட நீர்
மெல்விரல் ஊழ்தெறியா விம்மித்தன் – மேல்விரலின்

பொருள் : மாலையில் தோன்றும் கதிரவன் மறைதலைக் கண்டு வரிகள் படர்ந்த கண்களில் காதல் வருத்தத்தின் மிகுதியால் கண்ணீர் பெருக அதனைத் தன் விரல்களால் துடைத்து எரிந்து தன் கணவன் தான் குறித்த படி வரவில்லையே என்று ஏங்கியவாறு தன் கையையே தலையணையாகக் கொண்டு படுத்துக் கிடப்பாள்! அந்தோ என குற்றத்தை என்னென்று கூறி ஆற்றுவேன்!

வேற்றுமைத்தொகை :

இரண்டாம் வேற்றுமைத்தொகை	செல்சுடர் நோக்கிச் ⟶ **செல்சுடரை** நோக்கிச் **ஐ** என்ற இரண்டாம் வேற்றுமை உருபு மட்டும் மறைந்திருக்கிறது (செல்சுடரை நோக்கிச் என்றால் கதிரவனைக் நோக்கிச் என்பதாகும்)

16) கோங்கரும்பு அன்ன முலையாய் பொருள் வயிற்
பாங்கனார் சென்ற நெறி

பொருள்: தலைவியானவள் பொருள் வயிற் பிரிந்த தலைவன் பிரிவை எண்ணிச் சாற்றியது. சிவபெருமானே! காக்கை, பாம்பு என்னை ஈன்ற தாய் ஆகியவர்களுக்கு நான் செய்த குற்றம் யாது? கோங்கு மலரின் பொன் போன்ற அரும்பினை யொத்த தனங்களையுடைய தோழியே! பொருள் வயிற் பிரிந்த என் தலைவர் சென்ற காட்டுப் பாதை மிகவும் கொடியதாகும்.

வேற்றுமைத்தொகை :

மூன்றாம் வேற்றுமைத்தொகை	பாங்கனார் சென்ற நெறி ⟶ **பாங்கனரால்** சென்ற நெறி **ஆல்** என்ற மூன்றாம் வேற்றுமை உருபு மறைந்திருக்கிறது (பாங்கனரால் சென்ற நெறி என்றால் காதலனால் சென்ற காட்டுப் பாதை என்பதாகும்)

நிறைவுரை

இந்த ஆய்வின் வழி நாலடியாரில் நிறைய பாடல்களில் வேற்றுமைத்தொகை மறைந்திருப்பதை கண்டறியப்பட்டுள்ளது. நாலடியாரில் உள்ள பாடல்களில் உருபும் பயனும் உடன் தொக்க தொகையைக் காட்டிலும் வேற்றுமை உருபு மட்டும் தொக்க தொகை அதிகமான அளவில் காணப்படுகிறது. மேலும், நாலடியாரில் உள்ள பாடல்களில் இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரை மறைந்திருக்கிறது. அதுமட்டுமின்றி, ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு நாலடியாரில் உள்ள பாடல்களில் அதிகமான அளவில் காணப்படுகிறது என்றால் அது மிகையாகது. மேலும், வேற்றுமைத்தொகை பயன்பாடு நாலடியாரில் மட்டுமில்லாமல் வேறு சில பாடல்களிலும் அமைந்திருக்கும் என்பது திண்ணமாகும்.

துணைநூற்பட்டியல்

அன்புமணி. (2007). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

இராமசுப்பிரமணியம். வ. த. (2011). நாலடியார் மூலமும் உரையும். சென்னை:திருமகள் பதிப்பகம்.

சீனி நைனா முகம்மது. செ. (2014). நல்ல தமிழ் இலக்கணம். சிலாங்கூர்: உங்கள் குரல்.

சுப்பிரமணியன். ச. வே. (2012). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் தெளிவுரையும். மணிவாசகர் பதிப்பகம்

பொன்மணி மாறன். (2008). தமிழ் இலக்கணம். திருவனந்தபுரம். அடோன் பதிப்பகம்.